**STC .No. 2694/2025**
**நாள் – 17.02.2026.**

பு.**சா.1 – திரு. குமார் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )**

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்).**

இரண்டாம் எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் அப்பா மூலம் பழக்கம். 13 வருடத்திற்கு முன்பு எனது அப்பா இறந்துவிட்டார். இரண்டாம் எதிரியை 15 வருடமாக தெரியும். இரண்டாம் எதிரியின் குடும்பம் ரீதியாக பழக்கம். நான் சின்னையா என்ற ஆவணஎழுத்தரிடம் தினக்கூலியாக வேலை செய்கிறேன். கடந்த எட்டு வருடமாக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு தற்போது வயது 24. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. இரண்டாம் எதிரியிடம் இதற்கு முன்பாக வரவு செலவு இல்லை என்றால் சரிதான். இரண்டாம் எதிரியின் குடும்பத்தாரிடமும் எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரிதான். புகார் மற்றும் அறிவிப்பில் என்னுடைய சேமிப்பு மற்றும் நகையை அடமானம் வைத்த வகையில் கடன் தொகை ரூ.பத்து இலட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நகைகளை எவ்வளவு தொகைகளுக்கு அடமானம் வைத்தேன் என்றால் ரூ.7,80,000/-, அடமானம் வைத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி கடன் கேட்ட அன்றே பணத்தை கொடுத்துவிட்டேன் என்றாலும் சரிதான். எதிரிக்கு என்வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். நானும் அம்மாவும் மட்டும்தான் இருந்தோம். வழக்கு காசோலையில் கையொப்பம் ஒரு மையிலும் நிரப்பிய பகுதிகள் வேறு ஒரு மையிலும் உள்ளது என்றால் சரியல்ல. வெவ்வேறு மையாக உள்ளது என்றாலும் நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் பெருந்தொகை கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் எதையும் எழுதி பெற்று பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரி நிறுவனம் சிமெண்ட் டீலர் தொழில் செய்து வருகிறது. அதில் எத்தனை பங்கு தாரர்கள் என்றால் தெரியாது. 1 எதிரி நிறுவனம் 2021 வருடம் மூடப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிரி நிறுவனத்தின் முகவரி எனக்கு தெரியும்

என்றால் சரிதான். நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. புகார் மற்றும் அறிவிப்பில் எதிரிக்கு என் வீட்டில் கடன் கொடுக்கும் போது நான் மற்றும் எனது அம்மா இருந்தோம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் எப்போது பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் 01.07.2025 அன்று கேட்டேன். தட்டிக்கழித்ததால் 1ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தேன். இரண்டாம் எதிரியின் அண்ணன் முருகேசன் என்பவரை தெரியாது. முருகேசனுக்கும் எதிரிக்கும் சொத்து தகராறு உள்ளது என்றால் தெரியாது. மேற்படி முருகேசனிடம் எதிரியின் காசோலையை என்னிடம் கொடுத்து மோசடியாக ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 01.07.2025 அன்று நான் பணத்தை எவ்வாறு கேட்டேன் என்றால் நேரடியாக கேட்டேன். காசோலையை வசூலுக்கு செலுத்திய அன்றே என்மீதும் மேற்படி முருகேசன் குடும்பத்தார் மீதும் எதிரி நகர் தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றாலும் அதன் பேரில் விசாரணைக்கு அழைத்தார்கள் என்றாலும் சரிதான். அந்த சங்கதிகளை குறிப்பிட்டு இரண்டாம் எதிரி பதிலறிவுப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். CSR No.633/2025 என பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் விசாரணைக்கு நான் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். மேற்படி புகார் சம்மந்தமாக சங்கதிகளை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். கையெழுத்துக்கு கீழாக உள்ள புரோப்பரேட்டர் என்பதற்கான முத்திரை மற்றும் கையெழுத்தை நானே உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டாம் எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றாலும் என்னிடம் நான் சொன்னவாறு கடன் ஏதும் பெறவில்லை என்றாலும் அதை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமான மூலம் இல்லை என்றாலும் இரண்டாம் எதிரியின் அண்ணன் குடும்பத்தாருடன் சேர்ந்து பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இரண்டாம் எதிரி சட்டப்படி செலுத்த வேண்டிய தொகை ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.02.17 16:06:53 +0530

Judicial Magistrate No.I
Dindigul.